
ரிஜிஸ்டர் நம்பர், M. 2285.

அருட்பெருஞ்சோதி.

# அருட்பிரகாசம்.

திங்கள் வெளியீடு.



திருமதி சியாமளா
(1982)

ந்தா ரூ. 2. ஆயுட்சந்தா ரூ. 25.

பத்திராதிபர்:— வடலூர், தி. கோ. வரதராஜர்.

# இராமலிங்கசுவாமிகளின்,

## தோத்திரப்பா.

---

யாழ்ப்பாணம், சபாபதி நாவலரின் மாணக்கர்களி லொருவராகிய திருவிடைக்கழி திருவாளர், சு. குமாரசாமி பிள்ளை அவர்களால் பாடப்பெற்றது.

---

இந்தே ழுறிந்தாங் கமைந்தவெனு மெழிலார் நுதலாற
புன்மயலார், நைந்தே கிடக்கும் நாயேற்கும் நறுமா
மலாச்சே வடியிணையை, வந்தே யளிப்பாய் ஒளிப்
பாயேல் மற்றோர்துணையிங் குளனல்லேன்
அந்தோ அலைவே ளிராமலிங்க வரசே யகத்தே யமர்ந்தருளே.

நாயேன் புவியிற் பிறந்தபயன் நானோ வறிவேன்
ஞானியர்தம், வாயே யிழுத்து வம்புரைத்து மனவாக்
கடங்கா திகழ்ந்திடுவேன் பேயே யனைய சிறியன்
சொற்பிழையா மனைத்தும் பொருத்தருளென்
ருயே விராமலிங்கபெருந்தகையே வடலூர் தனிமுதலே.

பஞ்சிற் பாட்டே நினைப்பாடேன் பாடுவாரைப்
பரிந்தூட்டேன், நஞ்சிற் கொடியேன் பவமனைத்து
நானே யெனவே நவில்படிறேன்; நெஞ்சி லுனது
திருத்தாளை நினையாதயர்ந்தேன் நிறையிருளின், மஞ்சிற்
கரிய மனத்தேன்பால் வடலூர் மருந்தே வருகுவையோ?

---

உ
ஓம்.
திருச்சிற்றம்பலம்.
அருட்பெருஞ்சோதி.

# அருட்பிரகாசம்.

ஊத்தரஞான சிதம்பரம்
ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்க சங்க
நிலயத்தினின்றும்
வெளிவருவது.

மலர் 2 } சாலி சகாப்தம் 62.
விபவ ஆண்டு பிரட்டாசித்திங்கள் 11-ம் நாள்
1928 ஹு செப்டம்பர் மீ 26உ { இதழ். 5

## உத்தரஞான சிதம்பர மான்மியம்.

அருளோங்கு கின்ற தருட்பெருஞ் சோதி யடைந்த தென்றன்
மருளோங்கு ருமற் றவிர்த்தது நல்ல வரமளித்தே
பொருளோங்க நானருட் பூமியில் வாழப் புரிந்த தென்றும்
தெருளோங்க வோங்குவ துத்தர ஞான சிதம்பரமே.

## அருட்பெருஞ்சோதி மான்மியம்.

அருட்பெருஞ் சோதியென் னுருயி ரிற்கலந் தாடுகின்ற
அருட்பெருஞ் சோதியென் னன்பிற் கலந்தறி வாய்விளங்கும்
அருட்பெருஞ் சோதித்தெள் ளாரமு தாகியுள் ளண்ணிக்கின்ற
அருட்பெருஞ் சோதிநின் னுசையொன் றேயென்னு ளார்கின்றதே.

## சிற்சத்தி மான்மியம்.

சோதிக் கொடியே யானந்த சொரூபக் கொடியே சோதியுருப்
பாதிக் கொடியே சோதியிடப் பாகக்கொடியே யெனையீன்ற
ஆதிக் கொடியே யுலகூட்டி யாளுங் கொடியே சன்மார்க்க
நீதிக் கொடியே சிவகாம நிமலக் கொடியே யருளுகவே.

## உலகப் பேறு.

இன்பா லுலகங்கள் யாவும் விளங்கின
துன்பா லிறந்தவர் துன்பற்றுத் தோன்றினர்
அன்பா லடியவ ராடினர் பாடினர்
என்பா லருட்பெருஞ் சோதியா ரெய்தவே.

அருட்பெருஞ்சோதி ! அருட்பெருஞ்சோதி !!
தனிப்பெருங்கருணை !! அருட்பெருஞ்சோதி !!!

## சன்மார்க்க முரசு.

கிழக்கு வெளுத் ததுகருணை யருட்சோதி யுதயங்
கிடைத்த தென துளக்கமலங் கிளர்ந்த தென்தகத்தே
சழக்கு வெளுத் ததுசாதி யாச்சிரமா சாரஞ்
சமயமதா சாரமெனச் சண்டையிட்ட கலக
வழக்கு வெளுத் ததுபலவாம் பொய்ந்நூல் கற்றவர்தம்
மனம் வெளுத்து வாய் வெளுத்து வாயுறவா தித்த
முழக்கு வெளுத் ததுசிவமே பொருளெனுஞ் சன்மார்க்க
முழு நெறியிற் பரநாத முரசு முழங்கியதே.

---

# மக்கட் பிறவி.

---

மக்கட் பிறவி, மற்றேனைய மிருகம், பறவை, நீர்வாழ்வன, தவழ்வன, தாவரம் ஆகிய பிறவிகளிற்றலை சிறந்தது. மற்றைய பிறவியினின்றும் மானிடப் பிறவியை எய்துதல் கடலைக் கையால் நீந்தி வந்தவனுக்குச் சமமாகும். மக்கட் பிறவியினருமையை ஆன்றோர் பலரும் புகழ்ந்து பேசியுள்ளார்கள். மக்கட் பிறவியினால் பேரின்பந் துய்க்கவும், ஆண்டவன் பெருங் கருணைத்திறத்தை உணரவுங்கூடும். ஏனைய பிறவிகளாற் கூடா. ஆதலின் மக்கட் பிறவியைப் பெற்ற ஒவ்வொருவர்களும் மக்கட் பிறப்பாலடையும் பயனைப் பெறுதற்குக் கடமைப் பட்டுள்ளார்கள். மக்கட் பிறப்பாலெய்தும் பயனாவது ஆண்டவன் பெருங் கருணைத் திறத்தை உணரும் மெய்யுணர்ச்சியை யடைவதேயாம். மெய்யுணர்ச்சி யொன்றினால்தான் மக்கட் பயனை யடைகின்றனர். மெய்யுணர்வின்றி எந்த பொருளையும் எல்லை காண வியலாது. கல்வி கற்பதும், கேள்வி கேட்பதும் மெய்யுணர்விற்காகவேயாம். மெய்யுணர்வை யடையாத வரையிலும் மெய்யுணர்வைப் பெற முயற்சியில்லாத வரையிலும், கற்றவர் கற்றவராகமாட்டார். கேட்டவர் கேட்டவராகமாட்டார்.

“கண்ணாற் கண்டதும் பொய்க் காதாற் கேட்டதும் பொய் தீர விசாரித்துணர்வது மெய்” என ஆன்றோர் கூறியுள்ளார்கள். கண்ணாற் கண்டது கல்வி, காதாற் கேட்டது கேள்வி, கல்வி

கேள்விகளாற் றீர ஆராய்ச்சி பண்ணுவது மெய்யுணர்ச்சி. இதனையே அநுபவ ஞான மென்றும், சிவ ஞான மென்றும், பிரம ஞான மென்றும், சாகாக் கல்வி யென்றும், பிரம வித்தை யென்றும் திடஞான மென்றும் கூறுவர். இம்மெய்யுணர்ச்சியினால் மக்கள் மக்களாகப் புகழப்படுவார்கள், மெய்யுணர்ச்சியினால் சமரச ஞானத்தை எளிதிற் பெற்றுக் கொள்ளலாம். மெய்யுணர்ச்சியைப் பெற விரும்பும் ஒருவர்க்குச் சாதி வேற்றுமை சமய வேற்றுமை தோற்ற மாட்டாது. சாதியிலும் சமயத்திலும் சில மெய்யுணர்ச்சியைப் பெறு முபாயங்கள் கூறியிருப்பதுண்டு. ஆனால் அவ்வுபாயங்களே உண்மை யுணர்ச்சியாகாது. உபாய நீங்கின விடத்தில் உண்மை யுணர்ச்சியுண்டாகும். உண்மை யுணர்ச்சியாற் பேரின்பம் பெறுதற்குரிய நாம் உபாயங்களிற் சிக்குவது எவ்வளவு பேதமை? உண்மை யுணர்ச்சி யுண்டாகாமற் றடைப்படுத்துஞ் சில போலி உணர்ச்சிகளை உணர்ந்து விலக்கிவிட வேண்டும்.

எல்லாச் சமயங்களுக்கும் எல்லாச் சாதிகளுக்கும ஆண்டவன் ஒருவனே. உலகமும், உலகத்திலேயுள்ள உயிர்களும அவனுடைய உதவியினாலேயே வாழ்ந்து வருகின்றன. ஒவ்வொரு நிமிஷமும் அவனாற் கிடைக்கும் உதவியோ அனந்தம். அவனை நேரோ அறிவதற்கியலுமோ வென்னினியலாது! எப்படி அறியலாமென்னின் அவன் செய்யும் அளவுகடந்த உதவியினால் அறிதலமையும். அக்கடவுளின பேருதவியை நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து. நெகிழ்ந்து நெகிழ்ந்து, அன்பே நிறைந்து நிறைந்து, ஊற்றுப்போல் ஓடி வருங் கண்ணீரினால் நனைந்து நனைந்து, இறைவனின் அளவு கடந்த பெருமைகளைப் புகழ்ந்து புகழ்ந்து, பாடி வருவோமாகில் மெய்யுணர்வாகிய இயற்கையின்ப நிறைவைப் பெறலாமென நமது வள்ளற் பெருமான் கூறியுள்ளார்கள்.

நமக்கு இடைவிடாது யேற்படும் மரணம், பிணி, மூப்பு, கவலை, பயம், வறுமை சிறுமை முதலிய வெல்லாம் நமதாண்டவனால் நமக்கேற்படுத்தப்பட்ட தண்டனைகளேயாகும். இராஜ விசுவாசம் அற்றவர்களுக்கு எத்தனைக் கஷ்டங்கள் ஏற்படுகின்றதென்பதை நேரிலே கண்களாற் பார்த்தறிகின்றோம். இதுபோலவே, தெய்வீக அரசாங்கத்திலும் கட்டுப்பட்டிருக்கின்றோ

மாதலால் தெய்வ விசுவாசமும் அத்தியாவசியமாகக் கொள்ள வேண்டியவர்களாகவே யிருக்கின்றோம். இல்வாதவரையில் மேற்கூறிய தண்டனைகளுக்குப் பாத்திராகுவோம். நமது ஆண்டவன் நமதறிவுக் கறிவாயிருந்து நமக்கு உபகரித்துக் கொண்டுவரும் உதவியை உணர்ந்து பார்ப்போமானால் ஒரு நிமிஷமும் அவரை மறத்தற் கியலுமா? உலகசாட்சி செய்யும் அரசனும் நமக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வரியிறைகளை வசூலிக்கின்றான். ஆண்டவன் அப்படிச் செய்கின்றானா? நாமே கொடுப்பினும் வாங்குந் தன்மை யுடையவனன்று. எனெனில் நம்மைப்போல நாம ரூபமும், குறுகிய நோக்கமும், விருப்பு வெறுப்பும, சுகதுக்கமும் உடையவனல்லன். ஆதலால் அவன் எல்லா உயிர்களிடத்தும் நிரம்பி நிற்கின்றானென்றும், உயிர்களுக்கு உதவிசெய்வதே ஆண்டவனுக்குச் செய்யும் கைம்மாறு என்றும், அவ்வாறு செய்யும் உதவியில் பெரியார் சிறியார் என்ற போலிச் சமயமும், போலிச் சாதியும் குறுக்கிடுமாகில் ஆண்டவன் ஒரு தன்மையன் எங்கு நிறைந்த பரமபொருள் என்ற உணர்ச்சி தடைபடுகின்றது என்றும், எந்தச் சமயத்தாரிடத்தும் எந்தச் சாதியாரிடத்தும் கடவுள் விளக்கம் சமமாக நிரம்பி நிற்கின்றது என்றும், உள்ளபடியே உணரும் உணர்ச்சியும், அவ்வுணர்ச்சியால் நமது எழை மக்களைச் சமமாகக் கண்டு உதவி புரிவதுந்தான் ஆண்டவனுக்குச் செய்யும் உண்மைத் தொண்டாகும். நமதாண்டவனின் உதவியை உள்ளபடியே உணர்ந்திருப்போமானால் அவ்வுதவிக் குதவி நமதாண்டவனுக்குச் செய்ய விரும்புவோமானால். நமதேழை மக்களுக்குப் போதிய உணவும், கல்வியும், ஞானமும் உணர்ச்சியும் உண்டுபண்ணக்கூடிய முறையிலே நாம் கொஞ்சமும் பின்வாங்கவேமாட்டோம்.

நாம் ஆண்டவன் உதவியை அறிகின்றோமென்ற அது போது உலகெங்கும் நன்கு விளங்குவதாகும். அந்தக் காலந் தான் நன்றியறிதலுடையவர்களானதாம். நாம் இப்போது நன்றியறிதலைக்காட்டுஞ் செய்கைகள் படாடோபமான செய்கைகளேயன்றி ஆண்டவனுக்கும் அறிஞர்களுக்கும் ஒப்பக்கூடியதல்ல. இச் செய்கைகளால் பெரும்பயனை யடைகின்றோமில்லை. இனியாவது நம்மக்கள் உணர்ந்து விழித்துக்கொள்ளுதல்வேண்

டும். மக்கள் ஒவ்வொருவர்களும் ஆண்டவன் பெருங்கருணைத் திறத்தை உணர்ந்து அவரவர்களும் மக்களுக்கு உணர்ச்சியை உண்டுபண்ணும்படியான பணியை யாற்றுதல் வேண்டும் நமது நாட்டிலே, நமது மொழியிலே, நமது பூரண இயற்கை யுண்மைக்கடவுளை உள்ளங்கை நெல்லிக்கனிபோற் காட்டிய ஸ்ரீமத் வள்ளற் பெருமானின் சமரச ஞான போதனையே இக்காலத்திற்கியன்ற அறமாகும். அப்போதனைகளிற் சமயஞ்சார்ந்த போதனைகளும், சமயாதீதமான போதனைகளும் கலந்து நிற்கின்றன. முற்பகுதிகள் சமயஞ் சார்ந்தனவும், பிற்பகுதிகள் சமயாதீதமானவையுமாகும். நாம் இக்காலத்திற் கைக்கொள்ளவேண்டியது சமயாதீதப் பழம்பொருளே யாகும். சுமார் மூந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட ஸ்ரீமத் தாயுமான சுவாமிகளும்,

சைவ சமயமே சமயம் சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள் வெளிகாட்டு மிந்தக் கருத்தை விட்டுப்
பொய் வந்துழலும் சமயநெறி புகுதவேண்டா முத்தி தருஞ்
தெய்வ சபையைச் சேர்வதற்குச் சேரவாருஞ் சகத்தீரே.

எனக்கூறியுள்ளார்கள்.

நாம் அளவு கடந்த காலம் சமயநெறிக்கு அடிமைப்பட்டு நமது சுக வாழ்க்கையுங் கெட்டு பலவித பேத புத்திகளைக் கேட்டு தன்னறிவின்றி உணர்ச்சியின்றி தவித்துக்கொண்டிருந்த காலமெல்லாம் போதுமானது இனி அவ்வாறிருப்பதடாதது. கண்மூடி உலகம் போய்க் கண்ணுடி உலகமாய் விளங்குகின்றது. நமதருமை அருளாசிரியர் குறிப்பிட்ட நாட்களும் கோட்களும் அணுகிவருகின்றன. நமக்கெல்லாம் வல்ல ஆண்டவனும், அருட்பெருஞ்சோதிப் பெருமானும், சமயாதீதப் பழம பொருளும், இயற்கை புண்மையின்ப வுருவினனுமாகிய கடவுள் தன தருட்பிரகாசத்தை உலகெங்கும் பரப்பிவருகின்றார். எங்கு பார்த்தாலும் அருள் விளக்கங்களே விளங்குகின்றன. நாம் நாமும் அவரது பெருங் கருணைத் திறத்தைப் பெறுதற் கவாவுதல் வேண்டும். ஆண்டவன் வருகையைக் குறித்து,

ஸ்ரீமத் வள்ளலார் அநுபவமாலை (48)

ஆசையுண்டேல் வம்மினிங்கே அருட்சோதிப் பெருமான்
அம்மையுமா யப்பனுமாயருளு மருளாளன்

ஏசறநீத் தெனையாட்கொண் டெண்ணியவா றளித்தான்
எல்லாஞ்செய்வல்ல சித்தன் என்னுயிரிற் கலந்தான்
தேசுடைய பொதுவிலருட் டிருநடனம் புரியத்
திருவுளங் கொண்டெழுந்தருளும் திருநாளிங்கிதுவே
மோசவுரை யென நினைத்துமயங்காதீ ருலகீர்
முக்காலத்திலுமழியா மூர்த்தமடைந்திடவே.

எனக்கூறியுள்ளார்கள்.

ஆதலால், எல்லா உயிர்களிடத்தும் எவ்வித சாதி சமய வேறுபாடுகள் கருதாது ஆன்மநேய வுரிமைச் சகோதரராகி கொலை புலை நீக்கிய சுத்த சன்மார்க்கத் திருநெறியில் சமரச ஞானத்தைப் பெற்று மெய்யுணர்ச்சியால் இம்மக்கட் பிறப்பா லெய்தும் பயனையடைய முயல்வோமாக. சுபம.

---

## உண்மைச்சமயம்.

( ருஷிய மகான் டால்ஸ்டாய் அவர்கள் )

---

மனித வர்க்கம் தனக்கு ஏற்பட்டுள்ள தீமைகள் எல்லாம் நீங்கி நன்மையுற வேண்டுமானால் அஃது இருவகை மயக்கங் களிலிருந்து விடுதலைபெறவேண்டும். புரோகிதர்கள் பொய்ச் சமயக் கொள்கைகளினால் மக்களை மயக்குகிறார்கள். தற்கால அறிஞர்களோ சமயமே வேண்டுவதில்லையென்னும் பொய்ம்மை வாதத்தினால் மக்களை வேறொரு மயக்கத்தில் ஆழ்த்த முயல் கிறார்கள். இவ்விருவகை மயக்கங்களினின்றும் மக்கட்குலம் விடுதலை பெறும் நாளே அஃது உய்யும் நாள் எனலாம். நிறைந்த புட்டிக்குள் எதையேனும் விட வேண்டுமானால் முதலில் அதற் குள்ளிருப்பதை வெளியே கொட்டிக் காலிசெய்யவேண்டும். இவ்வாறே மக்கள் உண்மைச் சமயத்தை மேற்கொள்ளுவதற்கு முன்னால் பொய்ச்சமயத்தைப் புறக்கணிக்கவேண்டும்.

“ ஆனால் உண்மைச் சமயம் உண்டா? சமயங்கள் பலப்பல இருக்கின்றனவே? அவற்றுள் எது உண்மைச் சமயம் எது பொய்ச் சமயம் என்று எவ்வாறு நிர்ணயிப்பது? நமக்குப் பிடித்திருப்பதனால் ஒன்றை உண்மைச் சமயம் என்று கூறிவிட லாமா? என்று சிலர் வினவலாம்.

சமயங்களின் வெளிச்சடங்குகளை மட்டும் நோக்குவோரே இவ்வாறு வினவுவர். இக்கேள்வியே தவறாகும். சமயங்கள் தங்கள் வெளித் தோற்றங்களிலேயே மாறுபடுகின்றன. அடிப்படையான கொள்கைகளில் அவை எல்லாம் ஒன்றுபட்டனவே யாகும். இவ்வாறு எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாயிருக்கும் அடிப்படையான கொள்கைகளே உண்மைச் சமயமாம். தற்காலத்தில் நம்மனைவருக்கும் தகுதியான சமயம் அதுவே. மக்கட் குலத்துக்கு நேர்ந்துள்ள தீமைகள் எல்லாவற்றையும் போக்கக் கூடியதும் அதுவே.

மக்கட் குலம் தோன்றி நெடுங்கால மாயிற்று. இக்காலத்தில் மனிதர்கள் தங்கள் உலக வாழ்க்கைக்குரிய சாதனங்களை எவ்வளவோ அபிவிருத்தி செய்துகொண்டிருப்பதுபோல் வாழ்வுக்கு அடிப்படையான சமயக் கொள்கைகளையும், அவற்றினின்றெழும் ஒழுக்க முறைகளையும் பெரிதும் அபிவிருத்தி செய்திருக்கிறார்கள். குருடர்கள் இவற்றைக் காணாவிட்டால் அதனாலேயே அவை யில்லை யென்று ஏற்பட்டு விடாது.

உலகில் பெரிய சமயங்கள் என்னென்ன உண்டோ, அவை எல்லாவற்றிற்கும் பொதுவாக உள்ள கொள்கைகள் அடங்கிய சமரச சமயமே, தற்காலத்துக்குரிய பொதுச் சமயமாகும். மனித வர்க்கம் இன்னும் அடியோடு மிருகப் பிராயமடைந்துவிடவில்லையானால், அதற்குக் காரணம் மேற்படி உண்மைச்சமயத்தைக் கடைப் பிடிப்போர் சிலர் ஒவ்வொரு தேசத்திலும் இருப்பதே யாகும். இவர்களே மக்கட்குலத்தின் சிறந்த மணிகளாவர். அவர்கள் ஒருக்கால் புரோகிதர்கள், விஞ்ஞானிகள் என்னும் இவ்விரு சாராருடைய மந்திர தந்திர மயக்கத்தி லாழ்ந்திருப்பினுங்கூட தங்களை யறியாமலே, வெளிப்படையாக ஒப்புக்கொள்ளாமலே, மேற் கூறிய சமரச மெய்ச் சமயத்தைக் கடைப்பிடித்து ஒழுகி வருகின்றனர்.

இவ்வுண்மைச் சமயத்தின் தத்துவங்கள் மனிதர்களுக்கு முற்றும் இயற்கையா யிருக்கின்றமையால், அவற்றை எடுத்துக் காட்டிய உடனே மக்கள் வாதப்பிரதி வாதம் எதுவுமின்றி

அவற்றை ஏற்றுக்கொள்கின்றனர். கிருஸ்துவ சமயத்தில் பிறந்த நமக்கு, கிருஸ்துவ சமயத்தின் அடிப்படையான கொள்கைகளில் எவை யெவை ஹிந்து மதம், கன்பியூஷிய மதம், ஹீப்ரு மதம், புத்த மதம், இஸ்லாம் மதம் என்றும் இவற்றின் அடிப்படையானகொள்கைகளுடன் ஒத்திருக்கின்றவோ, அக்கொள்கைகளே உண்மைச் சமயமாம். இவ்வாறே ஹிந்து மதம் முதலிய பிற மதங்களில் பிறந்தவர்களுக்கு, அந்தந்த சமயத்தின் அடிப்படையான கொள்கைகளில் எவையெவை மற்ற எல்லா மதங்களுக்கும் பொதுவாயிருக்கின்றனவோ, அவையே உண்மைச் சமயமாகும். இத்தகைய பொதுக் கொள்கைகள் மிகவும் எளியவை; சுலபமாக விளங்கக்கூடியவை: குழப்பம் சிறிதுமில்லாதவை.

அக்கொள்கைகள் வருமாறு:- ஆண்டவன் ஒருவன் உண்டு; அவனே எல்லாவற்றிற்கும் ஆதிகாரணன்; அவ்விறையவனின் ஒரு சிறு பொறி மனிதனிடம் இருக்கின்றது; மனிதன் தான் வாழும் முறையினால் அப்பொறியை வளர்க்கவோ, தேய்க்கவோ முடியும்; தன்னிடமுள்ள இந்த தெய்விக அம்சத்தைப் பெருக்குவதற்கு மனிதன் காமக் குரோதங்களை அடக்கவேண்டும்; அன்பை வளர்க்கவேண்டும்; நடை முறையில் இதைக் கொணருவதற்கு விதியாவது, "மற்றவர்கள் உனக்கு என்ன செய்யவேண்டுமென விரும்புகிறாயோ அதையே நீயும் மற்றவர்களுக்குச்செய்" என்பதே யாகும். இந்தக் கொள்கைகள் எல்லாம் கிறிஸ்துவ மதம், ஹிந்து மதம், ஹீப்ரு மதம், கன்பியூஷிய மதம், இஸ்லாமிய சமயம் எல்லாவற்றிற்கும் பொதுவானவை (புத்த சமயம் கடவுளின் இயல்பை வகுத்துக் கூறாவிடினும், மனிதன் நிர்வாணமடையும்போது அவன் ஐக்கியமடையும் ஒன்றைக் குறித்துக் கூறுகிறது. இந்த ஒன்றையே பிற மதங்கள் கடவுள் என வழங்குகின்றன.)

"ஆனால் நீர் சொல்வது சமயம் அன்றே? அது தத்துவமாயிருக்கலாம்; சன்மார்க்கமாயிருக்கலாம்; ஆனால் அது சமயம் மட்டும் அன்று" என்று இக்காலத்து மனிதர்கள் கூறுவார்கள். இயற்கைக்கு மாறுபட்ட, பொருளற்ற விஷயங்களை சமயத்தின் முக்கிய சின்னங்கள் என அவர்கள் இதுகாறும் கருதிவந்தனர்.

எனவே சமயம் அர்த்தமற்றதாய், எளிதில் விளங்காத ஒன்றாய் இருக்கவேண்டுமென்பது அவர்கள் நம்பிக்கை.

ஆனால் உண்மையென்ன வெனில், ஒவ்வொரு சமயத்தின் ஆரம்ப காலத்திலும் மேற்கூறிய கொள்கைகளே அதன் அடிப் படையாயிருந்து வந்தன. பின்னல் காலம் ஆக ஆக, அவற் றைத் திரித்தும் குலைத்தும் மறைத்தும் விட்டு, அறிவுக் கொவ் வாத அற்புதங்கள், இயற்கைக்கு மாறான நிகழ்ச்சிகள் இவை களைச் கற்பித்து, இவையே சமயத்தின் முக்கிய சின்னங்கள் என்பதாக ஜனங்கள் கருதுமாறு செய்து விட்டார்கள். எனவே இயற்கைக்கும், அறிவுக்கொவ்வாததுமே சமயம் என்று கூறுவது அழுகிப்போன பழத்தை மட்டும் அருந்திவிட்டுப் பழம் என்றால் நாற்றமும், கெட்ட சுவையுமுள்ள ஒரு தீய பொருள் என்று முடிவு செய்ததையே யொக்கும்.

உண்மைச் சமயத்தின் இயல்பை வலியுறுத்திக்கூறி இதை முடிப்பாம். எல்லாவற்றிற்கும் ஆதி காரணமான பரம் பொரு ளுடன் மனிதனுக்குள்ள உறவையும், அவ்வுறவிலிருந்து ஏற் படும் மனித வாழ்க்கையின் நோக்கத்தையும் நிர்ணயிப்பது சமய மாகும். அவ்வாழ்க்கை நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட ஒழுக்க நெறியையும் சமயம் வகுக்கின்றது. உலகிலுள்ள எல் லாச் சமயங்களினுடையவும் அடிப்படையான கொள்கைகள் அடங்கிய சமரச சமயமே மேற்கூறிய சமய இலக்கணத்துக்கு முற்றும் பொருத்தமுடையதா யிருக்கின்றது. இச்சமரச சமய மானது இறைவனுகிய முழுமுதற் பொருளின் ஒரு சிறு பகுதியே மனிதன் என்றுக் கூறிக் கடவுளுடன் மனிதன் உறவை நிர்ணயிக்கின்றது. இதிலிருந்து, மனிதன் தன்னிடமுள்ள தெய் வாம்சத்தை வளர்த்துக் கொள்வதே அவனது வாழ்வு நோக்கம் எனத் தீர்மானிக்கின்றது. பின்னர், இந்நோக்கத்துக் கிணங்கிய வாழ்க்கை நெறியை வகுக்குங்கால், "பிறர் உனக்கு என்ன செய்ய வேண்டுமென விரும்புகிறாயோ அதையே பிறருக்குச் செய்" என்னும் விதியை வகுக்கின்றது. வையகப் பொது மத மான இச்சமரச சமயம் ஒன்றே மனித வாழ்க்கையிலுள்ள தீமை கள், குறைபாடுகள் எல்லாவற்றையும் போக்கி மக்கட் குலத்தை மகோந்நத நிலைக்குக் கொண்டு போய் உய்விக்க வல்லதாகும்.

"நவசக்தி"

# ஷடாந்த சமரசம்.

சீகாழி, ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை அவர்கள்,

(மலர் 2. இதழ் 4. பக்கம் 110-ந் தொடர்ச்சி.)

திருச்சிற்றம்பலம்.

யாமாமாநீயாமா மாயாழீ காமாகாணுகா
காணுகா மாகாழீ யாமாமாநீமா மாயா. (1)

இப்பதிகத்தில் காழியான் எனவரும் இடங்களில் நின்மலனுய் நிலை வேறுடையவனென்றும், திருமிடற்றின் கண் களங்கமுடையவனென்றும், திருமாலிடத்துத் தனது காத்தற் சத்தியைப் பொருத்தினவனென்றும், காளிதமான விஷத்தையுடைய காளியன் என்னும் நாகமும் காளி என்னும் பகவதியும் பூசித்துப் பேறுபெற்ற சீகாழிப் பதியையுடையவனென்றும், ஏனைத் தத்துவங்கட்கு முதற்காரணமாகிய நாதத்தை விரிப்பவனென்றும், பொருள் கொள்க.

யாம் ஆம் ஆ நீயாம்–யாவும் ஆகும் ஆறு நீ ஆகும்; மாமாயா–சுத்த பரிக்கிரக சத்தியாக நாதமாகிய மாமாயையுடையவனே; ஆழி–கிருபா சமுத்திரனே; காமா–அவாப்த சமஸ்தகாமனே; காணு ஆகா–தோன்ருத திருமேனியுடையவனே; காண் ஆகா-அழிதலைக் காணமுடியாத; மாகாழிய; மா–சிறப்பையுடைய; மாயா–உத்யுத்தனே நீமா மாயா–பாசம் யாவற்றினின்றும் இயல்பாக வீடு பெற்றவனே. இதனுல் தத்துவங்கள் எல்லாவற்றிற்கும் காரணமாவது நாதமென்றும், அந்நாதத்தின் அந்தத்தே நிட்கள வடிவினனுய் நின்று அதனை இயக்குவோன் இலயசிவன் என்றும் பெற்ரும். ஆ கடைக்குறைந்து நின்று ஆம் என்னும் பயனிலை கொண்டது.

இனிப் பழைய உரை:– யாமாமா–எனது ஆத்மபோத சேட்டையும் கருவிகளின் சேட்டையும் இவைகளால் அவைகள் ஆமாறு, நீயாமாம்–அறிவுக்கறிவாய் நிற்கின்ற நினது சேட்டை யொழிந்து வேருென்றற்ற சற்காரியமாயுள்ள உன்னுலே யாகும். மாயாழி–மிகுதிப்பட்டு மேலாயிருந்துள்ள நாத சொரூபமாயிராநின்ற யாழையுடையானே; அத்தன்மை மிகுதிப்பட்டு நலஞ்சிறந்துள்ள யாழை யிடைவிடாமல் தடவி வாசித்தலான் மகா நல்ல வீணை தடவி யென்றும் பொருள். கா இது இடைநிலை. மாகாணுகா–பாமாகாசத்தைக் கீழ்ப்படுத்தப்பட்டு மலைகளுக் கெல்லாங் குலமலையாகிய ஸ்ரீ கைலாசத்தின் கண்ணே எழுந்தருளி யிருப்பவனே; காணுகா–என்னுள்ளக் கண்ணுக்குத் தோன்றப்பட்டுள்ள திருமேனியை

யுடையவனே; மகாழீயா—ஊழிக்காலத்தின் கண்ணும் அழிவின்மையாகிய மேன்மையைப் பொருந்தியுள்ள காழியை யுடையவனே, மாம்—ஈங்குன தருள் பெறாத பேரிழப்பையுடையமாகிய எம்மை, ஆயானீ—இடபவாக னத்தின் கண்ணே ஏறிவந்தெனக்குப் பொய்கைக் கரையின் கண்ணே வெளிப்பட்டவனே, மாமாயா—மாமாயையாகிய குடிலையைக் கொண்ட சுத்தமாயையிலுள்ள தத்துவங்களை யுண்டாக்கிக் கன்மம் புசித்தல் காரண மாகத் திரோதாயி சத்தியாலே மறைத்துள்ள மயக்கமே யறிவாகப் பெத் தத்தைச் செலுத்தப்பட்டவனே, இடையே நிறுத்தினகா—அந்த மாயா மயக்கம் எனதறிவிற் சீவியாமல் ஒழித்து உன்னை எனக்குள்ளபடி தந்து என்னை நீ நெகிழாமற் கொண்டு இவ்வாறு நீ இரண்டற வாழ்ந்து காப்பா யாக என்றவாறு. இவ்வண்ணமே பிற செய்யுள்களுக்கும் கண்டு கொள்க.

யாகாயா ழீகாயா காதாயா ராராதா யாயா
யாயாதா ராராயா தாகாயா காழியா காயா. (2)

யாகாய ஆழி—பக்தர்களது பிறவிச் சமுத்திரத்தை, காய் ஆகா—ஒழிக் கும் மேனியுள்ளவனே, தாயார் ஆர் ஆதாயா ஆயா—மாதாவை ஒத்த நிறைந்த பேறும் கூட்டமும் ஆயவனே, யாய் ஆதாரா—ஆதார சத்திக்குத் தாயானவனே, ராயா—அரசனே, தாக ஆயா—எவரது விருப்பமும் ஆய வனே. காழியா——, ஆகாயா—சிதாகாச சொரூபியே, எனக்குத் துணை ஆகாயா நீயே மூவகை யுயிர் வருக்கத்திற்கும் மெய்த்துணை என்றபடி. சிவபெருமானது திருவுருவம் திருவருளே யாகும். அச்சிவ சத்தியின் சொரூபம் ஞானம் ஒன்றே. அஃது உயிர்கட்கு அநுக்கிரகத்தையே குறித்து நிற்கும். அது பற்றிப் பஞ்ச கிருத்தியங்களானும் பஞ்ச மலங் களைக் களைந்து பரமானந்தத்தை விளைப்பன்.

தாவர்மூவா தாசா காழீநாதா நீயாமாமா
மாமாயா நீதா நாழீகாசா தாவாமூவாதா. (3)

தாவா மூவா-கெடாத மூவாத, தாசா-அடியார்க்கெளியனே, காழி நாதா- ——, நீயாம் ஆம் ஆ-நீயும் யாங்களும் ஆகும் விதம் பெரிது, மா மாயா——, நீதா-நீதனே, நாழீகாசா-கால அளவும் பிரகாசமு முள்ள வனே, தாவா மூவாதா-அட்டவீரட்டஞ் செய்தவிற் சினத்தையுடை யவனே இலயபோக அதிகாரங்களைச் செய்தற்கு மூவராகிய முதல்வனே வீடு பேற்றை அடியார்க்கு அனுக்கிரகிப்பாயாக. கால தத்துவத்துக்கு மேவம் முற் பிற்பாடுகள் சிவாகமங்களிற் கேட்கப்படினுங் காலங்கடந்து நிற்கும் சிவபிரானுக்கு அக்காலத்தால் வேற்றுமை கருதப்படாது.

நீவாவா யாகாயா ழீகாவா வானோவா ராமே
மோரா வானோ வாவா காழீயா காயா வாவாநீ. (4)

நீவாவாயா-அழியாத வாய்மையுள்ளவனே, காய ஆழீ-பிறவிக் கடலை, வான் நோ வாராமே-பெரிய நோய்வராமல், வாகா-வந்து காப்பாற்று, மோரா-மேரு போன்றவனே, வானோ-ஆகாயமோ, ஆஆ-என்ன வியப்பு காழீ ஆகாயா——, ஆவாநீ-கெடாதநீ; யாம் என்றும் கெடாதவகை சிவ ஞானத்தைப் பாலிப்பாயாக. பிறவி நோயின் கொடுமையை நெஞ்சறி வுறுத்தலிற் காண்க. மலையையும் வானையும் ஒப்புக் கூறிய தன்மையை யும் பிறவொப்புமையையும் விண்ணப்பக் கலிவெண்பாவுள் நோக்குக.

யாகாலா மேயா காழீயா மேதா வீதாயாவி
வீயாதா வீதாமே யாழீகா யாமேலா காயா. (5)

யாகாலா-எக்காலமும் உள்ளவனே, மேயா, காலாதீதனே, காழீயா——, மேதா-அறிஞனே, வீதாய்-பறவை தாவி, ஆவிவீயாதா-உயிர் கெடாதோ, வீவது ஆமே-அவ்வாறு கழிவது தகுமோ, ஆழீகாயா-கடல் போன்றவனே அருள் மேனி கொண்டவனே, மேல் ஆகாயா-பரமா காயனே. அப்பரமாகாயமாகிய சிதாகாசத்தை எமக்கு அருளுக. மரணத் தின் பின்னர்ச் சவமாகக் கிடக்கும் உடலின் இழிவு கருதி அதன் சேர்க் கையை விடுதற்கு உபாயந் தேடல்வேண்டும். அன்புருவம், அருளுரு வம், இன்புருவம் என்றதன் உண்மையைக் கருதுக,

மேலேபோகாமே தேழீகாலாலே காலானுயே
யேனுலாகாலேலா காழீதேமே காபோலேமே. (6)

மேலேபோகாமே-மார்க்கண்டன்மேல் செல்லாதபடி, தெழிகா லாலே—உதைத்த காலினாலே, கால் ஆனுயே-எமனுக்கு முடிவுகாலம் ஆனாயே, என்னால் ஆகால் எலா-எங்களால் அவ்வாறு பூசித்தல் இயலாது, காழீதேமே-காழி என்னுமிடத்தின் மேல், காபோலேமே-அழியாத கற் பகச் சோலையை ஒவ்வோமே. யாம் பெற்ற பேரின்ப சித்தியை எம்மை யடுத்தடுத்துக் காண்போர்க்கும் ஈதற் பொருட்டு அருள் புரிக. காலாந் தகன் காமாந்தகன் முதலிய திருநாமங்கொண்ட சிவபெருமானது வீரட்டங்களைக் கண்டுணர்க.

நீயாமா நீயே யாமதா வேழீகா நீதானே
நேதாநீ காழீவேதா மாயாயே நீமாயாநீ (7)

நீஆமா நீயே ஆம்மாதா-உன்னை ஒப்பார் நீயே ஆகிற தாயகமும் நீயே, எழீகா-எழு பிறப்பையும் காத்தருள்க, நீதானே-நீதிபரனே, நேதாநீ-நியாமகம் செய்பவன்நீ, காழீவேதா——, மாயாயோ கெடாதவனே, நீ——, மாயாநீ-மாலையக்குத் தலைவன்நீ, அம்மாயா மயக்கினை ஒழித்திடுக. மாயன் என்பதற்கு ஆச்சரிய குணமுடையவன் என்பதும் ஒன்று. "நின்னுவார்" என்ற சூக்தியின் பொருளை இதனோடு ஒத்துப் பார்க்க. ஏழேழ் பிறப்பினும் உற்றதுணை சிவபெருமானே என்க.

நேணவராவிழ யாசழியே வேகத னேரியளாயுழிகா
காழியுளா யரிளேதகவே யேழிசையாழ விராவணனே (8)

நேணவராவிழ-தேட வந்துவிழ, யாச அழியே-குற்றத்தை நீக்குக, வேகதன் ஏரியள் ஆயுழி-துர்க்கை நடனத்தில் அழகுள்ளவளாய் வந்த காலையில், கா-காத்தவனே, காழியுளாய்——, அரிளே தகவே-அவள் குற்றப் படுதல் தகுதியோ, எழ் இசையாழ் அவ் இராவணனே-ஏழிசைகளை நரம்பாகிய யாழைக்கொண்டு பாடினவன் அவ்விராவணன். வேகதன் ஏரியள் ஆயுழி என்பதனை இராவணன்மேல் ஏற்றிக் கடுங்கோபத்தால் தன் பராக்கிரமத்தைக் கருதிக் கர்வங் கொண்டபோது எனப் பொருள் கோடலும் ஒன்று. இராவணனுடைய மீறுதலைக் கண்டும் இரங்கி யருளியவாறு எமக்கும் கருணை பொழிக. சிவபிரானை வழிபடும் பல்லாற்றினும் அவன் திருவருள் சித்திக்கும் என்றபடி.

காலேமேலேகாணீ காழீகாலே மாலே மேபூ
பூமேலே மாலே காழீகாணீ காலேமே லேகா. (9)

காலேமேலேகாணீ-இடம் மேலுள்ளதைக்காண, காழீகாலே-பாதாளத்தினும் கழிந்த காலைக்காண, மாலே திருமாலும், மேபூ-பூமியின்மேல் உள்ள பூமேல் ஏ-தாமரை மலரிலுள்ள பிரமாவும், மாலே-முயன்றும் மயங்கினுர்கள், காழீகாணீ-காழியை யிடமாகக்கொண்டவனே, காலேமே லேகா—உன் காலை என் சிரசின்மேல்வைத்துக் கா. சிருட்டி திதிகள் மாயையின்பாற் பட்டன. சங்காரகாரண னொருவனே பரமமுதற் காரணன்.

வேரியுமேணவகாழியோயே யேனைநினேம டலோகார்தே
தேர்கவேளாடமனே நினையேயெயொழி காவணமேயுரிவே. (10)

வேரியும் எண் நவகாழியோயே-மணமும் வலிமையும் புதுமையுமுள்ள காழியோனே, ஏனை நின் நேமம் அடலோ-மற்றை உனது நிய

மம் வெல்வதை யறிகிலர், கார்தே-தேவர்க்கு கஞ்சு போன்றவர், தோர்க ளோடு அமணே-பௌத்தர்களும், சமணர்களும் காவணமே உரிவே-புழுக் கூடுபோன்ற தோலினையுடையவர், நினை எவ ஒழி-அவர் வஞ்சகத்தை நினைந்து ஒழிப்பாயாக. சுவப்பிரயத்தனங்களாற் பயனில்லை. திருவருளை முன்னிட்டுச் செய்யும் சிவதருமங்களேஞான வேள்விக்கு முதற்படி என் பதுணர்த்தி அச்சிவஞானமே சிறந்தது என்று வலியுறுத்துகின்றார்.

நேரகழாமிதயாசழிதாயே னனியேனனிலாயுழிகா
காழியுளானினையே னினயேதாழிசையா தமிழாகரனே (11)

நேர் அகழாம் இதய ஆசு அழிதாயே-அகழை ஒத்த மனத்தின்கண் குற்றத்தை ஒழிக்கும் மாதாவே, நனி ஏனன்-மிகுந்த பாவியின் குற்றத் தையும், நிலாயுழிகா-இப்பதிகங்களைப் பாடும்போது காப்பாயாக, காழி யுளான்——, இனையேன்-வருந்தாதவன், நினையேதாழ் இசையா-உன்னை யே எண்ணித் தாழ்ந்த இசையோடும் பாடுகின்ற, தமிழாகரன்-தமிழுக் கிடமானவன்.

இசையெச்சங்களை வருவித்துரைக்க.

இனிப்பழையவுரை:—

நேரகழாமிதயாசழிதா-மானைக்காட்டி மானைப் பிடிப் பதுபோலவெனற் பால திருமேனி கொண்டருளி யென்னை ஒரு காலத் திலும் விட்டு நீங்கப்படாமல் என்னிடத்திலே மிகுதியாகச் சீவிக்கப் பட்ட மலத்திரயங்களாகிய குற்றங்களை அழியாநின்றுள்ளவனே, ஏனநீ-உனது பரிபூரணமான அணுவுருவ நிலையில் எகைக்குண்டான தாசோக நிலையெல்லாம் நீயே, எனநீளாயுழி-என்னிடத்திலே நின்று என்னை யொழித்துக் கோதிலா வமுதாக நீயே வாழப்பட்டு என்னைச் சிறிதுந் தோன்றவிடாமல் இரக்ஷியா நின்றுள்ளவனே, காழியுளா-இத்தன்மை யான பிரமசாயுச்சியத்தை அடியேற்கும் பிரசாதிப்பான் பொருட்டாகக் காழியென்னும் பதியைப் படைத்துளானே எனதொரு விண்ணப் பத்தைக் கேட்டருள்வாயாக, நினையே நினையேதாழிசை-உன்னைச் செய் யுட்கருத்தாக உடைய இம்மாலை மாற்றென்னும் பெயரையுடையதுமாய் விரித்துள்ள பாடலானது, ஆதமிழாகரனே-அய்யோ தமிழுக்குப் படு துறையாகிய யான் எனது போதத்தாற் பாடிய பாடலென்று உலகத்தா ருமாசெய்வதேயாதலால் நீயறிய யான் பாடியதில்லை யென்கின்ற செய்தியுனக்கே நிகழுமாதலால் இப்பாடலை யேத்தத் தவஞ்செய்தா நீயே யடிமைகுலையாத சாயுச்சியத்தைப் பெறுவார்கள் என்றவாறு.

திருச்சிற்றம்பலம்.

திருமாலைமாற்றை உள்ளக்கசிவோடு இராமலிங்கப் பெருமான் ஓதிச் சூக்குமவுபாசனை செய்யவே, திருஞானசம்பந்தப் பெருமான் அவர்க்கு முன்னர்த்தோன்றித் தமது சந்தானத்து 64-வது வள்ளலாகத் திருவருட்பிரகாச வள்ளலென்னும் ஞானாசாரிய அபிஷேகத்திருநாமஞ் சூட்டித் திருவருட் சித்தராக்கினர். இனி யருட்பிரகாசவள்ளலாரது பெருங்கருணையால் 'நாதாந்தம்'' என்னும் கட்டுரையை வரைவோம்.

(தொடரும்.)

---

# அஷ்ட முகூர்த்தம்.

(சென்னை முன் ''நியுரிபார்மர்'' பத்திராதிபர்,
D. கோபால செட்டியார் அவர்கள்)

''அஷ்ட மூர்த்தி'' எனும் பதம், ''எட்டு வடிவங்களையுடைய பொருள்,' எனும் பொருள் கொள்ளும். அது இறைவனுக்கு ஓர் திருநாமமுமாகும். இந்த எண்வடிவங்களாவன:— நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாசம், சூரியன், சந்திரன் ஆன்மா என்பனவாம். இவ்வெட்டினுள் சேதன அசேதன பிரபஞ்சமெல்லாம் அடங்கும். சிவன் மட்டும் அதில் அடங்கா. இறைவனுக்கு இந்த எட்டு வடிவங்களும் சரீரம் என்பதனால் அவருக்கும் உலகத்துக்கும் உள்ள சம்பந்தம் வெளியாகிறது. அச்சம்பந்தமானது உயிரும் உடலும் போன்றது. சரீரத்தில் இருத்தலைபோல், இறைவன் எல்லாப் பொருள்களிலுமிருக்கிறார். ஆகையால், அவர் விஸ்வந்தர்யாமி எனப்படுவார், ரிக்வேதத்திலும் உபநிடதங்களிலும் அவரை அந்தர்யாமி என்றே கூறப்பட்டுள்ளது. பிரபஞ்சத்தை தனது வடிவங் கொண்டமையால் அவருக்கு விஸ்வஸ்வரூபி என்றும் நாமமுளது. தன்னிடமிருந்து உலகத்தை தோற்றுவித்தலால் அவருக்கு விஸ்வகாரணர் எனும் நாமமும் ஒன்றுளது. நாம் நம்மிட சரீரத்தை நாம் என்றே கொள்வதுபோல் இவ்வெட்டு வடிவங்களையும் கடவுள் என்று கொள்ளுகிறோம். அதனல் மாணிக்கவாசக பெருமான் அடியில் கண்டவாறு கூறினர்.

''நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனா யமைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றா
னுலகே ழெனத்திசைபத் தெனத்தா னொருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ.''

இவ்வுலகின் கண் தாவர, விருக்ஷ பிராணவர்க்கங்களில் கடவுள் நிற்கும் தன்மையை இங்ஙனம் ஆராய்வாம், (Herleert Spencir) ஹெர்பர்ட் ஸ்பென்சர் எனும் ஆங்கிலேய சாஸ்திரியானவர் "உள் சம்பந்தங்கள் வெளி சம்பந்தங்களோடு இடைவிடாது இணங்குதலே" உயிர் என்றார். (பிராணிசாஸ்திர பத்ததிகள், வால்யம் 1. பக்கம் 74).

ஆகையால் அங்க நிர்மாணங்களின் பிரதான அடையாளம், அவைகளை சுற்றுமுள்ளவைகளுடன் ஜீவ சம்பந்தத்தை உடைத்ததாயிருத்தலேயாகும். ஓர் மாணிடச் சென்மமெடுத்தவன் பூமியுடனும், மற்ற சுற்றிலுமுள்ள பொருள்களுடனும், ஆதித்தன் வெப்பத்துடனும் இன்னும் கணக்கற்ற பலவற்றோடும் நேரான பரிசமுடையவனாயிருக்கிறான். பிராணி சாஸ்திரத்தை அனுசரித்து அவன் சுற்றுமுள்ள பொருள்களோடு அன்னுவயப்பட்டிருக்கிறானென்று கூறவேண்டும். இந்த அன்னுவயத்தால் தான் அவன் உயிரோடிருக்கிறானென்று நாம் கூறுகிறோம். வெவ்வேறு அங்க நிர்மாணங்கள் இந்த சுற்றுப் பொருள்களோடு சம்பூரணத்தில் பற்பல பிரமாணங்களாக அன்னுவயப்படுகின்றன. உதாரணமாக, மரமானது அதன் தண்டை அடுத்திருக்கும்; நிலத்தினுடனும், சூரியன் ஒளியினுடனும், அதன் இலைகளுடன் அமர்ந்த காற்றுடனும் அன்னுவயப்பட்டிருக்கிறது. ஆனால் உயர்ந்த உயிர்வர்க்கங்கள் அதிகமாய் அறியக்கூடிய முழு பிரபஞ்சத்துடனும் தன்னிட தாழ்ந்த விரிதலினால் அது சம்பந்தமற்றிருக்கிறது. சலன மின்மை என்கிற ஓர் குறைவு அது அன்னுவயப்படும். விஸ்தீர்ணத்தைக் குறைவுபடுத்துகிறது. உணர்ச்சி சம்பந்தப்பட்ட வரையில் அது இறந்ததாகவே இருக்கிறது. மரத்துக்கும் செடிக்கும் புழு வென்றும், பறவையென்றும், நதி யென்றும், நாடென்றும் தெரியாது உயிர் நிலையில் உயர்ந்த பறவைக்கு மரத்தை விட உயிர்பெருக்கம் அதிகமென்று உணரலாம்.

ஸ்தாவர வர்க்கத்தை யோசித்தாலோ பதார்த்தங்களின் அணுக்கள் இடைவிடா சலனத்துடனிருக்கின்றன. பலவித சூக்கும சக்திகள் இடைவிடாது தொழில் பட்டு பதார்த்தங்களை மாறுபாடு செய்தும், நூதன பொருள்களை உண்டாக்கிக் கொண்டுமிருக்கின்றன. சூட்டின் தொழிலால் ஆகாயத்தில் மாறுபாடுகள் தோன்றி புயல்காற்றும் மழையும் உண்டாகின்றன. மின்சார சக்தியும், ஆகர்ஷிக்கிற சக்தியும், நாம் அறியக்கூடாத பலவிதங்களில் இடைவிடாது தொழில்படுகின்றன. ஆகையால் பதார்த்தங்களும்கூட எப்பொழுதும் மாறுதல் அடைந்துகொண்டேயிருக்கின்றன. தாவர வர்க்கத்தில் மாறுபாடுகளிருக்கினும், உயிராவது வளர்ச்சியாவது அதில் கிடையாது. ஒரு சிறுவிதை மரமாகிறது. தாவர

வர்க்கத்தின் மாறுபாடுகளில் அதே பதார்த்தம் புது வடிவங்களை எடுத்துக் கொள்ளுகிறது. அவையவ உருப்புயமையப்பெரு வர்க்கங்களின் மாறுபாடுகள் உயிரற்ற சக்திகளால் உண்டாகின்றன. ஆயினும் அவைகளுக்குள் ஓர் சுருசுருப்புள்ள சக்தியிருக்கிறது.

விருக்ஷ வர்க்கத்தில் வேறான நிலைமைகளை நாம் காண்கிறோம். தாவர வர்க்கத்தின் பொருள்களையே போன்ற ஸ்தூல பொருள்களை இங்கும் காண்கிறோம். ஆனால் அவைகள் நூதன வகையில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சாதாரணமாய், அணுக்களின் கூட்டமாயல்லாமல் உண்ணின்று இயக்கும் ஓர் சூக்கும சக்தியால் அவைகள் தெரிந்தெடுக்கப்பட்டு சேர்க்கப்படுகின்றன. செடியின் உயிருக்கும் வளர்ச்சிக்கும் ஆதாரமான மூல பொருளுக்கு (Protoplasm), அவையவ மமையப்பெறுத பொருள்களில் இணையுரிமை கிடையாது. மரங்களின் பதார்த்தங்களின் மூலப்பொருள் என்பது சூக்கும அணுசமுதாயத்துக்கு மேற்பட்ட பொருள். அது இடைவிடாத மாறுதலும் சுருசுருப்பும் உடைத்தாயிருக்கிறது. செடிகளிலிருக்கும் பரமார்த்த சக்திகளை அவைகளின் ஆன்மாக்களெனலாம்.

செடிகளின் வளர்ச்சியைக் குறித்து ஐரோப்பிய பூத சாஸ்திரிகள் கூறும் விபரங்கள் ஆச்சரியப்படத்தக்கதா யிருக்கின்றன. பிராணிகள் உட்கொள்ளும் ஆகாரத்தை ஜீரணம் செய்வதற்கு ஒப்பான செய்கை அவைகளில் இருக்கின்றனவாம். செடியின் உயிருக்கு சம்பந்தப்பட்ட அநேக விஷயங்கள், அதாவது அதன் சாரத்தின் சுற்றுதலும், மொக்கு புஷ்பம் விதையாவதுபோலும் வளமாக்கும் பலவிதங்களும் கந்தமூல பதார்த்தங்கள் பேரில், சூடும், குளிர்ச்சியும், ஒளியும், இயற்றும் பலன்கள் இவைகள் போன்ற, கந்தமூல பதார்த்த சம்பந்தமான அநேக விஷயங்கள் ஞானவளர்ச்சிக்கும் விரிதலுக்கும் அபார கருத்துகளுக்கு இடம் தருகின்றன. உதாரணமாக, தாயுமானவர் கூறிய

> ''விரும்புஞ் சரியைமுதன் மெஞ்ஞான நான்கு
> மரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே''

இதில் ஞானசம்பந்த உபதேசம் எவ்வளவு நிறைந்திருக்கிறது என்பதை யோசித்துப் பாருங்கள்.

பிராணி வர்க்கத்திலோ வெனில், உயிர் பிரவாகம் அதிகம். ஐரோப்பிய பூதசாஸ்திரிகள் விருக்ஷவர்க்க மூலப் பொருளுக்கும், கந்த வர்க்க மூலப்பொருள்களுக்கும் (Protoplasms) வித்தியாசம் கண்டுபிடிக்க

முடியவில்லை என்கிறார்கள். மேலும், அவ்விருவகைப் பொருள்களின் உயிர்களுக்கும் மத்தியில் திட்டமான எல்லை ஏற்படுத்த முடியவில்லை என்றும் மேல் குறித்த சாஸ்திரிகள் கூறுகின்றனர். ஆயினும் பிராணிகளின் முக்கிய மணகுணங்களில் முதலாவது அரும் பொருளாகிய பிராணிவர்க்கத்துக்கே உரிய அங்கங்கள். இரண்டாவது, நன்னிஷ்டமான இயக்கம். மூன்றாவது, அறிவு விளக்கம். நான்காவது, மேன்மையாக உருவாக்கப்பட்ட நரம்புகள் ஒழுங்கு.

(இன்னும் வரும்)

---

# பரிபூரண ஞானியார்.

(மலர் 2. இதழ் 4. பக்கம் 121-ன் தொடர்ச்சி)

## ஒழுக்கம்.

பாக்கபுரி திரு பாலசுந்தரன், ஆசிரியன், அச்சிறுபாக்கம்.

இத்தகைய மங்கையர் உடலுறவாற்றுய்க்கு மின்பஞ் சிறிதளவாயிருத்தலினாலும், துய்த்துப் பிரிந்த பிறகே அவ்வின்பத்திற்கேற்ப துன்பமெய்தலானும் அவ்வாசையினை யொழித்து அன்பின் வழியைக் கடைப்பிடித்தலே முதலொழுக்கமாகும்.

நிற்க, அழிதன் மாலைத்தாய எப்பொருட்கண் ஆசை கொள்ளினும், அதனாற் றுன்பமடைதல் ஒருதலையாம்.

ஆகவேதான், "இன்பமுண்டேற் றுன்பமுண்டா
மேழை மனவாழ்க்கை" என நம்பியாரூரரும்,
"கோடிபொன் னுடையவ ரெனினுங் கோமுடி
சூடிய வேந்தரே யாயினுந் துன்பொடு
கூடிய வாழ்க்கைய ரன்றிக் கூறுங்கால்
நீடிய சுகமுளார் நிலத்தி லில்லையே"

எனப் பிறருங் கூறினர்.

ஆகவே, கணத்தின் மறையும் மங்கையர் உடலுரிமை நேயமும் துன்பந்தருந் தன்மையதாகும். அவர்களாற் பல்லாற்று முடல் மெலிவும், உள்ள மழுங்குதலும், உயரறிவு தாழ்தலும், உயிரொளி குன்றலும், நோய்வாய்ப்படுதலும் வலியிழத்தலும், ஆசை மிகுதலும் உண்டாகின்றன மகளிர் மயக்கத்தால் றுன்பமுண்டாதலை,

"பெண்டிரால் சுகங்க ளுய்ப்பான் பெரியதோ ரிடும்பை யெய்தி
உண்டி ராக்கிடக்கும் போது உடலுக்கே கரைந்து நைந்து"

எனத் தொண்டரடிப்பொடி யாழ்வாரும், "மங்கையர்பால் இன்பந் துய்த்த பிறகு பயக்குந் துன்பம் பாடிமிழ் பனிக்கடலினும் பெரிதாம்" எனப் பொருள்படும் குறளடியுங் (காமத்துப்பாலில்) கூறும். நம் அருட்பிரகாசனார் மகளிர் உடலுரிமையாம் நேயத்தினைப் பலவாறு பலவிடத்து வெறுத்து ஒழுகிய முறையைக் கூறுவாம்:—

உள்ளம் வேறு பொருளை இடைவிடாது பற்றுமியல்பின தாகலின் அஃது இறைவன்பாற் செலுத்து நெறிநின்று பழகினும், திடீரென மற்றொரு பொருளை அவாவி நிற்கும். அவ்வாறவாவி மயங்குமிடம் மங்கையர்பாலதே. ஆதவேதான், வள்ளற்பெருமானார் தன் கண்முன் எழிலுடைய மகளிர் தோன்றின் அவர்களைப் பார்த்து உளம் நடுங்கியும் அவர்களாக வலிந்திட நோக்குங்காலத்து வேறுவழி யுறைந்தும், உளமயங்கிப் புணர்ச்சிநேரின் அதனாலுறுமின்பத்திற் கேற்ப இன்னல் தனக்கும் அவட்கும் உண்டாமென வெருவி அதனை நுகராது கழிவராம். இதனை விளக்க,

"உருவுள மடவார் தங்களை நான்கண் ணுற்றபோ
துளநடுக் குற்றேன், ஒருவுளத் தவரே
வலிந்திட வேற்றே ருவளகத் தொளித்துய
விருந்தேன்."

"மங்கைய ரெனைத்தாம் வலிந் துறுந் தோறும்
மயங்கினா மிவரொடு முயங்கி
இங்குளங் களித்தாற் களித்தவர்க் குடனே
இன்னலுற் றிடுநமக் கின்னல்."

"வலிந்தெனையழைக்கும்...................யறிவாய்"
"வைகியநகரி லெழிலுடை மடவார்......யறிவாய்"

(பிள்ளைப்பெரு விண்ணப்பம்-45, 23, 24, 44)

எனத் திருவாய் மலர்ந்த வடிகளாலுணர்க. தன்னாற் புணர்ச்சி நேர்கின்ற காலத்துப் பிறகே தனனோடனுபவித்த மகளிர்க்கும் அப்புணர்ச்சியாற் றுன்பம நேர்தல் ஒருதலையாமாகலான் பிறர் படுந் துன்பத்தைக் காண்டற்கியலாத நம்பெருந்தகையார் அவ்விழைவினை அறவே ஒழித்தனர் எனப்புலனாகின்ற தன்றோ? இத்தகைய துன்பம் விளையுமேதுக்களால் அதனை வெறுத்து,

"இன்னு மிங்கெனைநீ மடந்தையர்......திருவடி மலர்க்கே."
(பிள்ளைச்சிறுவிண்ணப்பம்—7)

"சொன்னெடு வானத் தரம்பைய ரெனினுந் துரும்பெனக்
காண்கின்றேன் றனித்தே" (பிள்ளைச்சிறுவிண்ணப்பம்—6)

"மருவுபெண் ணாசையை மறக்கவே வேண்டும்"
(தெய்வமணிமாலை—8)

எனத் தேற்றேகாரங் கொடுத்து மொழிந்த மொழியானும் அவரது உள்ளத்துறவு நன்கு புலனும். பொதுப்பட,

"ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்
ஈசனோ டாயினு மாசை யறுமின்கள்
ஆசை படப்பட வாய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்த மாமே" (திருமந்திரம்)

எனத் திருவாய் மலர்ந்த திருமூலர் திருவாக்கே இறைவனடியடைய ஒழுகும் முதலொழுக்கமாம்.

இனி அருட்பிரகாசனுர் பொருள்விழைவினை வெறுத்தலாமாறு:-

"அருளில்லார்க் கவ்வுலக மில்லைப் பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாதி யாங்கு." (குறள்-அருள்-7)

"பொருளிலே யுலகமிருப்ப தாதலினுல்" (பின்-பெரு-விண்-42)

இவ்வுலகவின்ப மழியுந் தன்மையவாகலானும், சிறிதுநேரமே அவ் வின்பம் நின்றுப்பின் பெருந்துன்பம் பயத்தலானும், அங்ஙன மழியு மின்பத்தை நுகர்தற்பொருட்டு நிலையின்றியுருளுஞ் சகடக்கால் போன்ற செல்வத்தைத் தேடவேண்டியிருத்தலினுலும், தேடியபொருளைப்பிறர் கைக்கொள்ளாது காவல் செய்யவேண்டியதாலும், அதற்கொருகா லழிவு நேரில் அதனுற்றுன்பம் பெரிதாக விளைதலானும், நாளும் அதன்கண் ஆசையருது மேலும் மேலும் பெருகத்தக்க முயற்சியிலதுதாழ்த்துதலானும், இவ்வுலகவின்ப னுகர்தற்கேதுவாய பொருளின்கண் ஆசையினை அறவேவிட்டு தன்னிளமைப் பருவத்துப் பிறர்தரும் பொருளை அவர் மேலெறிந்தும்: தன்பால் மேவி நின்ற அன்புடையார்க்கு அருளின் சிறப்பை விளக்கி அழியும் பொருளாசை விடுதற் பொருட்டு, தன் சித்தின் திறத்தால் இரும்பினைப் பொன்னு...க்கி அதனைக் கிணற்றிலும் வாவியிலும் கேணியிலு மெறிந்தனரென அவரோடு சூழ்ந்து நின்ற பெரியார்களின் உரைகளானும் பாக்களாலும் நன்குணரலாம்.

இன்னும், தானுண்ணு முணவு இனிமை பொருந்தியிருப்பினும் அதற்கேற்பத் துன்பம் விளையுமெனச் சூழும் வெறும் வயிற்றெடுமிருப்

பர். பசிமேலீட்டாலுண்ண நேரினும் வெறுப்புடனுண்பார். மற்றும், சிற்றுண்டி விரும்பல், நண்ணிய துயில முழுக்குறல், நயந்த பொற் சரிகைத் துகிலணிதல், கையுற வீசி நடத்தல், பஞ்சணை படுத்தல், மெய் யுறக்காட்டல், பிறமக்களின் கோலமும் நடையும் கருதுதல், உயர்ந்த ஆசனத்திலிருந்து காலின்மேற் கால் வைத்தல், கால் கீழே நீட்டியமர் தல், நீட்டிப்பேசுதல். உரத்துப்பாடல், பகற்போதுறங்கல் கனவுகாண டல், குழுமிய கூட்டத்திற் செல்லல் முதலிய வழுவிய ஒழுக்கத்தி லுள்ளஞ் செல்லாது, சீரிய ஒழுக்கமும், சிவநேயச் சிந்தையும், செம் பொருளைக் குறித்துப் பலர்க்குரைத்தலும் முதலிய ஒழுக்கத்தினைப் பிள்ளைப்பெரு விண்ணப்பத்திற் காண்க.

இன்னும், தன்னிளமைப் பருவந் தொடங்கியே தன்னுடல் அழகு பெறப் பணிபூணலும், உடல் மிகப் பருத்துக் கண்டார்க் கச்சந்தரத் தேடு மவாவும், பட்டுந் துகிலும் புனைதலும், அவ்வாறு புனைந்து மக்கள் மணஞ் செல்லல், விழாவினைக் கண்டு களிப்படைதல், "கைக்குடையவே யெழுதிக் கட்டிவைத்த விவ்வுலகப் பொய்க்கதையே" (வின்-கலி-வெண்பா-362) படித்தும் பொழுது போக்குதல் முதலிய வின்றி, இறைவனைப்பல ஆபரணங்களாலலங்கரித்துவரும் பவனி கண்டு களித் தலும், உடற்பருத்தலை வெருவி இளைத்த வாக்கை வேண்டியும், வெண் பட்டுடுக்க வெருவியும்,

"மணமகனே பிணமகனுப் மணப்பறையே பிணப்பறையாய்
அணியிழையார் வாழ்த்தொலிபோய் அழுகை யொலியாய்த்"

(திருவிளையா-பழியஞ்சின-40) திகழும் மங்கல வாழ்க்கையை வெறுத்து அது நடக்குமிடம் நாட விழையாதிருத்தலும், சிவானுபூதியைத் தரு மருநூல்களை யோதியும்,

"ஓடுகின்றனன் கதிரவ னவன்பி னோடு கின்றன வொவ்
வொரு நாளாய்" (அருட்பா-2ந்திருமுறை-நற்றுணை-5) எனத் தன் வாழ்நாள் வீணாகக் கழிதற்கஞ்சியும் ஒழுகிவந்தனர் தானே தனித்து இறைவனுயுள்ள நம்பெருமானுர் மக்கள் தாமொழுகிறவாறே யொழுகி, அவர்களை பழிப் பிறப்பினை யழித்து, உலகவின்பமொழித்து ஆசைவாய்ப்படுமுலும் உள்ளத்தை இறைவன்பாற் செலுத்துமாறு காட் டியும் ஒழுகிய சிறப்பினை என்னென்று எவ்வாறு கூறுவது! இம்முறை யினைப் பிள்ளைப்பெரு விண்ணப்பம் 'சிறுவிண்ணப்ப முதலியவைகளிற் பார்க்கக்காணலாம்'.

இனி அப்பெருமான் உயிர்களை மீட்டுச் செலுத்திய விரக்க நிலையினையும், அவ்விரக்க நிலையான் இறைவனருள் கூடுமாறுகாட்டிய ஒழுக்க நெறியினையும் இனிக்கூறுவாம்.

(தொடரும்)

---

# மக்கட்பண்பு.

---

திருவாளர் R. முனிசாமி உடையார் அவர்கள் B. A.

(மலர் 2. இதழ் 4. பக்கம் 126-ன் தொடர்ச்சி)

---

மக்கட் சான்றாண்மைக்கு நாணுடைமை ஓர் இன்றியமையாக் குணமாகும். நாணுடைமையாவது இழிந்த செயற்கண் அச்சமுடையராதல். இஃது மனமொழி மெய்களால் ஒடுங்குந் தன்மையுடைய பதிமுகமாதர் நாணின் வேறுபட்டது. நாண் மாந்தர்க்குச் சிறப்புத்தரவல்ல ஓரணிகலன். அஃது எவரையுந் தீவினையில் ஒழுக்கி நடத்தாது. நாணிலார் தமக்குப் பழியைப் பயக்கும் தீவினைக்கஞ்சார். தீவினைக்கஞ்சார் பிறன்கேடு சூழ வஞ்சார். அவர் தம் உயிர்க்கும் உடற்கும் வருந்துன்பத்தை அறியார் போலும். தம்மைக் காக்க விரும்பின் தாம் தீவினைக் கஞ்சல் கடமை, தீவினைக்கஞ்சல் நாணுடைமையால் வரும். நாணுடைமையால் உயிரிழக்க நேரினும் அதன் பெற்றியுணர்ந்தார் உயிரின்பொருட்டு நாணைக்கைவிடார். நாணுரிடத்து அறம் தோன்றுது. அறமிலார் மறம்பூண் டொழுகுவார். மறத்தான் அவர்நன்மை கெடுவதுடன் அவர் குலத்திற்கே பேரிழிவு தோன்றும். ஆதலின் நாணைத் தம்முயிரின் ஓம்பக்கடவர்.

ஒருவன் பண்புடையானுகும் பொருட்டு உலகில் ஒப்புரவறிந்து ஒழுகக்கடவன். ஒப்புரவறிதலெனின் உலகு நடை அறிந்து செய்தலாம். எனின் உலகின் பொருட்டாகத் தாம் வாழ்தலாம். கைம்மாறு கருதாது உலகுய்ய காலத்திற் பெய்யும் மழைபோல் ஒருவன் உதவி செய்யக்கடவன்.

"ஏற்றகை மாற்றாமை யென்னானுந் தாமவரை
ராற்றுதார்க் கீவதா மாண்கடன் .........."

எனுமாறு யாதொன்றாயினும் இஃது இன்னார்க்குத்தக்கது இஃது இன்னார்க்குத் தகாதது என்று வரைந்து கொள்ளாம

லும் தமக்கென ஒன்றையும் மறைந்து வைத்துக் கொள்ளாம லும், தற்சேர்ந்த மாறுசெய்ய வலியற்றார்க்குக் கொடுப்பதே ஓராணமகனது கடமையாகும்.

"ஆற்று மாக்க ளரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை"

எனும் மணிமேகலை அடிகள் ஈண்டு உணரற்பாற்று, சாக் காடு, மூப்பு, துன்பம் முதலியன உண்மையாய் நமக்கிருக்கக் கண்டும் பொருட் காரணம் பற்றியே பொருளைத்தேடி இறு கப்பிடித்து வையாது உலகோர்க் கீந்துண்டு உயிர்க்கடன் கழிப் பின் பெரும் பேறெய்தலில் ஐயமில்லை. உலக நடையறிந்து அஃதுடன் ஒட்ட ஒழுகா ஒருவன் உயிரிருந்தும் உயிரின் அறி வுஞ் செயலுங்காணாமையின் செத்தாரின் வேறல்லன். அங்ஙனம் ஒழுகுவான் பயன்படு மாம் நடுவூருள் பழுத்ததுபோல்வான்.

"நடுவூருள் வேதிகை சுற்றுக்கோட் புக்க
படுபனை யன்னர் பலர் நச்ச வாழ்வார்
குடிகொழுத்தக் கண்ணுங் கொடுத்துண்ணா மாக்க
ளிடுகாட்டு ளேற்றைப் பனை".

எனும் நாலடிச் செய்யுள் உற்றுநோக்கத் தக்கது. இதில் கொடுத் துண்ணாரை மாக்களுக் கொப்பாக்கினர். இனி பொருளுள்ள விடத்தேயன்றி பொருள் சுருங்கிய காலத்துங் கடனறிமாந்தர் தம்மாலியன்ற வளவினல் பெரிதுவந்தீவர். ஒப்புரவு செய்தலால் ஒருவனுக்குப் பெருங்கேடு விளையுமாயின் அக்கேட்டைத் தன்னை விற்றாயினுங் கொள்ளக்கடவன் எனும் பொய்யாமொழியால் ஒப்புரவறிதலின் பெருமைபெற்றாம்

ஒழுக்க முடையவனும் பொருட்டு கண்ணோட்ட முடைய னுதல் வேண்டும். கண்ணோட்ட மென்பதை வடநூலார் தாட் சண்யமென்பர். தன்னுடன் பழகினரைக் கண்டவிடத்து அவ ரது பழமைபாராட்டி ஒழுகற்குக் கண்ணோட்டமென்ப. கண் ணோட்ட முண்மையால் இவ்வுலகியல் நடக்கின்றது. ஆகலின் கண்ணோட்டமில்லார் உலகியற்கு ஓர் பயனுமின்றி நிலத்துக்குப்

பெரும்பொறையாவர். உலகியல் அன்புடையாதல், தீவினைக் கஞ்சல், ஒப்புரவறிதல் முதலியவற்றின் அடங்கலால் கண்ணோட்டம் இல்லார்க்கண் அவையொன்று மிலவாம். கண்ணோட்ட முடையாரே முகத்து விளங்கும் இருகண்களான் எய்தும் பயன டைவர். அஃதிலார் தம்முகத்துக் கண்பெற்றும் கண்ணிலரே யாவர். கழிபெருங் கண்ணோட்டத்தான் தன்முறை பிறழாது தன்னைக் காத்துக்கொள்ளக்கடவன். எற்றெனின் தன்னோடு பழகினொருவன் பிறருக் கிடுக்கண் செய்தவிடத்து அவனைக் கண்ணோட்டத்தான் தண்டியாது விடுதலில் முறைகெடும். தன் னிடம் பழகியார் தன்னைவருத்தித் தனக்கே கேடுசூழ்ந்த விடத் தும் அவரைத் தண்டியாது கண்ணோட்ட முடையராய் அவரிடம் ஒழுகுபவன் தலைசிறந்தவனாவான்.

மக்கள் பண்புடையாராதற் பொருட்டு வாய்மை யுடைய வராய் இருத்தல் வேண்டும், வாய்மை யென்பது மெய்மை யின் தன்மை. பொய்மையும் மாசற்ற நன்மை பயக்குமெனின் வாய்மையின் வேறல்ல. "தீங்கு பயவாத நிகழ்ந்தது கூறலும் நன்மை பயக்கும் நிகழாதது கூறலும் மெய்ம்மை "யெனவும், பரிமேலழகர் வரைந்தார். தன்னுளம் அறியப் பொய்யா தொழுகுமொருவன் உலகத்தில் உயர்ந்தோரால்லெல்லாம் விரும் பப்படும் பெற்றிவாய்ந்து மிக்க புகழெய்துவான். பிறவறங்க ளெல்லாந் தரும் பயனை வாய்மை தானே தருமாற்றலுடைத்து; ஆதலால் பொய்யாமை எனும் நோன்பினைக் காக்கின் மற்ற வறங்களைக் காக்கவேண்டுவதில்லை. வாய்மைபூண்டொழுகின் மனம் தூய தன்மை யடையும். அதனால் புறங்கூறுதல், வெஃகு தல் அழுக்காறுதல், வெகுளல் முதலிய குற்றங்களினின்றும் மனம் நீங்குதல் இயல்பு. உலகிருள் கடியும் ஞாயிறு திங்கள் விளக்குகளைப்போன்று வாய்மை மனவிருள் கடிதலால் அஃது மிக்க மேம்பாடுடைத்து.

அன்பு நாண், ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையாகிய இச்சில சிறப்புக் குணங்களால் மக்கள் பண்புடையாதல் வேண் டும். பண்புடைமையான் ஒருவன் நல்வழிப்பயனும் நற்குடிப்பே றும் அடைவன். மக்களெல்லாம் உறுப்பால் ஒத்தல்போல் தத்தம் பண்பால் ஒத்தல் சாலவும் நன்று. உலகுக்கு நன்றி

புரிந்து புகழை அடைதலானும், பகையோரை அவர்தம் பகைமைமறுக்கச் செய்தலானும் பண்பைத் தக்கோர் கைவிடார். பண்புடனொழுகி பெருநலளடையாக்கு இவவியன்பெரு ஞாலம் இருளுடைத்து. என்புதோலானுகிய இவ்வுடல் பொன்றிய பின்னரும் புகழ் அன்றெனின் இப்பிறப்பால் அடையும் பயனென்னே! இது பற்றியன்றோ.

"தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று".

என்றார் நந்தெய்வப் புலவர்.

---

# மனவியல்.

---

வேள்ளாறு—கணநாதன்

(மலர் 1. இதழ் 4. பக்கம் 123-ன் தொடர்ச்சி)

---

மனம் வாயுவின் அம்சமாதலினாலும் நாம் சதா மூச்சுவிடுதலினாலும் பஞ்சேந்திரியங்களின் வழியே மனமானது சதா வெளிவிஷயங்களிற் சென்றுகொண்டிருக்கிறது. இதனால் வாயுவை அடக்கினால் அதன்வழி மனமும அடங்கும் என்பது அறிஞர் துணிபு. இதனை:

"வாயுநிற்க மனமு முடனிற்கும்" என்னும் சிவப்பிரகாசர் கூற்று வலியுறுத்தும்.

வானிலே பறக்க மண்ணிலே நுழைய மற்றுமோரூரிடைப் புகுதப்—போனதோருயிரை யெழுப்ப வல்லவர்களாயினும் மனத்தினைச் சங்கற்ப விகற்பமற, அலையில்லாத ஆழியைப்போலவும், காற்றில்லாத விடத்திலுள்ள தீபத்தைப்போலவும் நிறுத்துதல் முடியாது. மனமென்பதையே அறியாச் சிலர், "என்னேயிது! நாம் பார்த்து நம்[illegible]க்கினால் அடங்காதா? ஈதொரு பெரியக[illegible]மா?" என்று அலக்ஷியமாகக் கூறுகின்றனர். சதா மனதுடன் எதிரிட்டு வாதுசெய்தடக்கின பாமஞானிகட்கன்றோ அக்கஷ்டம் புலப்படும்? உலகமே சத்தியம் என்றும், மாடு மககள் வீடு சுற்றம் முதலியவைகள் சதமென்றெண்ணி, மனமெனும்

பேயினுலே, மாயையாம் இருளால்மூடி ஜனமெனு மாசாபாசந் தலைமிசை யேற்றிக்கொண்டு, கனமெனும் சுமையைத் தூக்கிக் கவலையுற்றுக்கிடக்கும் அஞ்ஞானிகளுக்கு எங்ஙனம் புலப்படும்? தன்னை யறியவொட்டாமல், தனக்குள்ளே யிருந்து தன்வயப்படி ஆட்டுவிப்பதை அறியாமையினுலன்றோ இங்ஙனம் அறியார் கூறுகின்றனர்.

"மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்"—என்று நமது மூதாட்டியாகிய ஒளவைப்பிராட்டியார் கூறியதை அறிந்திலர் போலும்! பின்னும்;

" கெடுக்கவல்லதுங் கெட்டவர்தங்களை
எடுக்கவல்லது மிம்மன மென்றதை
அடக்கவல்லவ ரைய! பவக்கடல்
கடக்கவல்லவ ராகுங் கடிதரோ."

" அறவினைக்கு மரும்பொரு ளின்பொடு
பெறுவதற்கும் பெருங்கல்வி கற்றுயர்
விறலினுக்கும் நல்வீரந்தனக்கு மோண்
துறவினுக்குந் துணைமன மென்பவே."

பிரபுலிங்க லீலை.

ஆதலால் மனமே சர்வத்திற்கும் காரணமாயிருக்கிறது.

இனி, மனதை ஏன் அடக்கவேண்டும்? அடக்காவிடில் நேரிடும் துன்பம் யாது? என்பார்க்குச்சில கூறுகின்றோம்.

மனமோ பூர்வவாசனைப்பழக்கத்தால் மூவாசைகளிற்சிக்கி அவைகளைத் தேடுவதிலும், அவை அதிகமாகக்கிடைத்த காலத்துத் தனக்கு யாரும் நிகரில்லையென்று இறுமாப்புறுதலும், அவைகளைக் காணுந்தோறும் மகிழ்ச்சியடைதலும் ஆகிய இத்தகைய செய்கைகளை யுடையதாய் உள்ளதே போதுமெனக் கொள்ளாது இன்னும் வேண்டுமெனப் பேராசைப் படுகின்றது. அது எண்ணிய எண்ணம் அனைத்தும நிறைவேறுவதில்லை சாங்காலத்தும் அவ்வெண்ணத்துடனே உடலை விட்டு வெகுகின்றது. இதனுல்,

" அவாவென்பவெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப்பிறப் பீனும் வித்து "

என்று தாயனார் அருளிய வண்ணம் இவ்வெண்ணமே மறுபிற விக்குக் காரணமாகிறது இதற்கு ஜடபாதர் முதலியோர் மானு கப்பிறந்த சரிதமேபோதிய சான்றாகும். இப்படியே அநேக ஜனனங்கள்தோறும் பிறவிக் கடலுள் வீழ்ந்து கரைகாணாது, கவலையுற்றுக் கலங்குவது மனம்.

"எப்பொருளைச் சிந்திப்பா னிவ்வுடல் விட்டேகும்போ
தப்பொருளையே யொருவ னார்ந்திடுவான்—பொற்பினவன்
எப்பொழுதுஞ் சிந்தித் திருந்திடலா லங்கினையவை
செப்பியவிவ் வுண்மைதனைத் தேர்"

என்றார் ஒரு பெரியார்.

இப்படியே மனம் போனபோக்கெல்லாம் செல்வதால் இறுதியில் ஆற்றொணாக் கொடுந்துயருக் காளாக்கி விடுகின்றது. ஆதலால் மனத்தினை, வெளிச்செல்லும்போதெல்லாம் தீயவழியிற் செல்ல வொட்டாம லிருத்திவிடவேண்டும். மனமாகிற மாட்டை அறி வாகிற கயிற்றால் வைராக்கியமென்னும் முளையிற் (முளை—நடுத்தறி) கட்டல் வேண்டும். இன்றேல் அது நிற்ற லரிது. இதற்கு ஒருதாரணம் கூறுவாம்,

தவஞான சீலராகிய தாயுமான சுவாமிகட்கு ஒரு சமயம் வடை தின்ன ஆசை உண்டாயிற்றாம். உடனே அவர் மனமே உனக்கு வடை வேண்டுமா? என்று அமைதியுடன் அங்கு உலர்ந்துகிடந்த சாணத்தை எடுத்து 'இதுவே வடை, சாப்பிடு!' என்று வாயிலிட்டு மென்றனராம். இப்படி வைராக்கியமாக இழுததுப்பிடித்து அதற்குத்தகுந்த தண்டனை செய்தாலன்றி மனமானது தீய வழியிற் செல்லாது நிற்காது.

இவர் தம் பாடலில் ஒருசமயத்தில்:

"எதுக்குஞ் சும்மா விருமனமே யென்றுனக்குப்
போதித்த வன்மையெல்லாம் போகவிட்டாய்—வாதுக்கு
வந்தெதிர்த்த மல்லரைப்போல் வாதாடினையே யுன்
புந்தி யென்ன போத மென்ன பேர்".

என்று கடிந்து கூறியிருப்பதும் இங்கு உணரற்பாற்று.

ஏ! பார்த்த! நீ கூறியபடி மனதை அடக்குவது அரிதே ஆயினும் அப்பியாசத்தாலும் வைராக்கியத்தாலும் நிக்கிரஹம்

செய்யலாகும் என்று பகவான் கீதையிற் கூறியருளினர். இந்திரியங்களை அடமாய் நிக்கிரஹம் பண்ணுவதுபோல மனதை அடக்கலாம். முதன்மையான உபாயங்கள் மூவகைப்படும்: அவையாவன: அத்தியான்மவித்தை, சாது சங்கம, பிராணுபாமங்களாம். இவற்றை விரிக்கிற் பெருகுமாதலால் வல்லோர் வாய்க் கேட்டுணர்க.

மேற்கண்ட உபாயங்களை அவரவர்களின் தரத்திற்குத் தகுந்தபடி அநுசரிக்கவேண்டும். மேலும், விஷத்தை விஷத்தினுலும், அழுக்கை அழுக்கினுலும் போக்கடித்தல்போல, மனத்தை மனத்தினுலே யடக்கவேண்டும். "மனத்தை யடக்க மனந் துணையாகும்-மனமாயை மாய மற்றொன்று மில்லை" என்னும் ஆன்றோர் வாக்காலும் உணர்க

சங்கற்ப விகற்பமே மனதின் உற்பத்தி இடமாகும். இச்சையே அதன் சொரூபம். சங்கற்ப விகற்பமற்ற ஒரு நிலையில் நிறுத்தி இச்சையுண்டாகாவண்ணம் கவனித்துவருதல் வேண்டும். எதுவரையில் சங்கற்பங்கள் ஒழியவில்லையோ அதுவரையில் மனம் ஒரு நிலையில் நிற்காது. அங்ஙனம் நிற்காத வரையில் பரமானந்தம் உதியாது. மனம் இறந்தவிடமே மோக்ஷவீடு. இதனை வாசிட்டமுடையாரும்:

"இறப்புறு மாயைக் கிச்சையே வடிவாம்
இதனுடை நாசமே வீடு" என்றும்.

"சங்கற்ப நாசத்தா லெளிதாக மனநாசந்
தானே யெய்தும்—இங்குற்ற மனமிறக்கில்
ஜனனமரணங்களெனும்—மாமு மாயும்"

என்றும் கூறுவர்,

ஆகையால், மனுலயமில்லாவிடில் பிறவிக்கடலை ஒழித்து நித்தியானந்தத்தை ஒருபோதும் அடையானென்பது திண்ணம். இதனுல்:

"கருத்தடங்கின் முத்தியது கையகலின் கட்டாகும்
விரித்தபொரு ளிதுவென்ன வறிவுடைய மேதக்கோர

திருத்தகுநல் லறிவாலே சித்தமதைத் திறம்பாமல்
அருத்தியுடன் நிலைநிறுத்துமது அறிவின் பயனுமால்''
—தேவிகாலோத்திரம்.

''அலையுமனத்தை யகத்தடக்குமவனே சரியைகடந்தோனும்
அலையுமனத்தை யகத்தடக்குமவனே கிரியை யொழிந்தோனும்
அலையுமனத்தை யகத்தடக்குமவனே யோக தற்பரனும்
அலையுமனத்தை யகத்தடக்குமவனே ஞானி யதிசூரன்''
—நிட்டானுபூதிசாரம்.

என்றருளிப் போந்தனர் பெரியார்.

மனதினிடமிருந்து உண்டாகும் எண்ணங்களுக்கு உருவமும் வர்ணமும் ஏற்பட்டிருப்பதாக சூட்சும சத்தியுள்ளவர்கள் கண்டறிந்திருக்கின்றார்கள். மனதிலுண்டாகும் கஷ்டமோ சுகமோ சூட்சும உலகிற் புலனாம். மனதின் சூட்சும சக்தியினாலேயே நம்முன்னோர்கள் வேறு அண்டங்களில் நடக்கும் சங்கதிகளை யுணர்ந்து ஆளந்தித்திருந்தார்கள் அவர்களால் நமக்காக மனோ வசியமாதிய அநேக தத்துவ சாஸ்திரங்கள் ஏற்பட்டிருக்க அவைகளை நாம் சற்றேனுங் கவனியாது வாளாங்கிருத்தல் தகுதியாமோ? ஆதலின்; அத்தகைய மெய்ந்நூல்களை நன்கு ஆராய்ந்து அதன்படி நடந்து மனதினை வென்று வீட்டுப்பேறெய்துமாறு இறைவன்திருவருள் பாலிப்பானாக.

இவ்வகையில் மனச்சேட்டையினை அறிந்து நமது திருவருட் செல்வனாகிய வள்ளற்பெருமான், அதனைக்கடிந்து அடக்கிய அமுதப்பாட்டு நமக்கும் துணை நிற்கும் ஆக!.

மனமெனுமோர் பேய்க்குரங்கு மடப்பயலே நீதான்
மற்றவர்போ லெனை நினைத்து மருட்டாதே கண்டாய்!
இனமுற என் சொல்வழி நீ இருத்தி யெனிற் சுகமே
யிருந்திடு என் சொல்வழி நீ யேற்றிலை யானாலோ
தினையளவு முன்னதிகாரஞ் செல்லவொட்டே னுலகஞ்
சிரிக்கவுனை யடக்கிடுவேன் திருவருளாற் கணத்தே
இன்னுமெனை யறியாயோ? யாரெனவிங் கிருந்தாய்
எல்லாஞ் செய் வல்லவனுக் கேற்றபிள்ளை நானே!,

# ஒழுக்கநெறிவிளக்கம்.

ச. கந்தசாமி முதலியார் அவர்கள்
சென்னை, இந்து தியலாஜிகல் ஹைஸ்கூல் தமிழாசிரியர்.
(பக்கம் 116-ன் தொடர்ச்சி)

உடலொழுக்கத்தின் இன்றியமையாமையை விளக்குதற் பொருட்டு, உட்காருதல், உண்ணல், உறங்கல் என்னும் மூன்றனைப்பற்றிச் சிறிதாராய்வாம். இவற்றை அற்பமானவை என்று அநேகர் கருதுவர். இவையே முக்கியமானவை யென்றும், இம்மூன்றன் சீர்திருத்தமே மனிதனை உயரிய நிலைக்குக் கொண்டுவரும் சீர்திருத்தம் பலவற்றிற்கும் அடிப்படையா மென்றும் விளக்க முயல்வதே எமது நோக்கம்.

**உட்காருதல்:** நமது ஆலயங்களில் உட்கார்ந்த வடிவமாக விளங்கும் எந்த விக்கிரகத்தைப் பார்த்தாலும், அது கால் முடக்கிச் சப்பளங் காலிட்டு முதுகெலும்பும் கழுத்தும் நிமிர்ந்து நேராக நிற்கும்படி உட்கார்ந்திருப்பதைக் காண்போம். சிவன் கோயில் தோறும் தக்ஷிணாமூர்த்தி யுருவத்தையும், விஷ்ணு கோயில்களில் இருந்ததிருக்கோலத்தோடு வீற்றிருக்கும் எம்பிரா னுருவத்தையும் கண்டு தெளிக.

உடம்பா ரழியில் உயிரா ரழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாய மறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே.

என்னும் கொள்கை நிரம்பிய பிராணாயாம யோகிகளனைவரும் நிமிர்ந்தே உட்காருவர். யோகிகளது முதுகு மறந்தும் வளையாமலிருப்பதற்குச் சாதனமாக அவர்களுக்குப் பதுமாசனம் முதலிய பலவகை ஆசனங்கள் (உட்காரும் வகைகள்) யோக நூல்களில் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் பதுமாசனம், சுவஸ்திகாசனம், சுகாசனம் முதலிய சில நம்மனோர் யாவரும் கைக்கொள்ளக்கூடிய அவ்வளவு சுலபமானவை. சங்கரர், இராமாநுஜர் முதலிய ஆசாரியன்மாரும், விவேகாநந்தர், ஸ்வாமி இராமதீர்த்தர் முதலிய மகாத்மாக்களும் உட்கார்ந்திருக்கும் நிலையை அன்னார் திருவுருவப் படங்களை நோக்கியுணர்க.

நிமிர்ந்து உட்காருபவர்களுக்குப் பிராணவாயு மூக்கு நுனியிலிருந்து மூலாதாரம் (அடிவயிற்றின் கீழ்ப்பாகம்) வரையில் சென்று வெளிவருவ

தால் அவர்கள் தேகம் ஒவ்வொரு நாடியும் அவ்வாயுவினல் தூய்மை யாக்கப்படுகின்றது. நாம் உட்கொள்ளும் காற்று சுத்தமான தென்றும், வெளிவிடும் காற்று அசுத்தமான தென்றும் நம்மெல்லோருக்கும் தெரியுமே. நிமிந்து உட்காராதவர்களுக்கு வயிறு சுருங்குகின்றது; அதனல் பிராணவாயு நாபி வரையிலும்கூடத் தாராளமாகச் செல்வதில்லை.

சில மாதங்களுக்கு முன் ஹிந்து (The Hindu) பத்திரிகையில் ஒரு டாக்டர்; "உங்கள் குழந்தைகள் நிமிர்ந்து உட்காராவிட்டால் (குனிந்து உட்கார்ந்தால்) அக் குழந்தைகள் நோயும் பலகீனமும் உடையன வென்று அறியுங்கள் அக்குழந்தைகளை என்னிடம் ஒப்புவித்துவிடுங்கள்" என்று விளம்பரப்படுத்தி யிருந்தார். அவருடைய வைத்தியத்தைப்பற்றி நாமொன்றும் அறியோம்; அவரது அபிப்பிராயம் மாத்திரம் சரியானதேயாம்.

உலகத்தில் பிரசித்திபெற்ற மனிதர்களைக் கவனியுங்கள். அவர்கள் யாவரும் நிமிர்ந்தே உட்காருகின்றார்கள் என்பதுணர்வீர்கள். அங்ஙனமே கூனிட்டுக்கொண்டும் முழங்காலை கட்டிக்கொண்டும் உட்காருகின்றவர்களைக் கவனியுங்கள். அவர்களெல்லாம் ஒரேவழி குடிக்கக் கூழுக்கும் கதியில்லாதவராகவாவது, பெரும்பான்மையும் பிணிவாய்ப் பட்டவர்களாகவாவது, தமக்கும் பிறர்க்கும் உபயோகமில்லாத சோம்பேறிகளாகவாவது இருக்கக் காண்பீர்கள். அன்பர்களே! நீங்கள் எப்பொழுதும் பதுமாசனமிட்டு நன்ருக நிமிர்ந்து உட்கார கற்றுக்கொள்ளுங்கள். அதிக நேரம் உட்கார முடியாவிட்டால் சிறிது படுத்துக்கொள்ளுங்கள். ஆனல் உட்காரும்பொழுதெல்லாம் நிமிர்ந்தே உட்காருங்கள்; நன்மையடைவீர்கள்.

(தொடரும்)

---

## கதம்பம்.

---

அறம், பொருள், இன்பம், என்னும் மூன்றனை, மண் பொன் பெண் எனமாறற்க கூறுவர். அன்பினல் அறம் பொருள் இன்பமெனவும், ஆசையால் மண் பொன் பெண் எனவும் பெயர் பெறக்கிடக்கின்றது. ஆசைப்பார்வையை நீக்கி அன்பு பார்வையால் பார்ப்பதே ஆன்றோர்களும் துறவு நூல்களும் போதிக்கும் உண்மைகளாம்

"அந்தலே கெட்டு சிந்தலே மாறுது என்பது ஓர் பழமொழி, ஐந்திலே கெட்டு சிந்தனைமாறுது என்பது அந்தலே கெட்டு சிந்தலே மாறுது என வழங்கிவருகிறது. இதன் பொருள். ஐந்து விடயங்களிலே சிந்தனையானது சென்று மாறுதலடைகின்றதென்பதாம். ஐந்து விடயமாவது கண்களாற்பார்ப்பது, காதுகளாற் கேட்பது, நாவினால் உருசிப்பது, தேகத்தினால் புணருவது, மூக்கினால் முகர்வது, இவ்வைந்து வாசனைகளிலும் சிந்தனை கெட்டு மாறுமலிருக்குமாகில் பேரின்பமடையலாம்.

* * *

உலகத்தைப் புகழ்வது ஒருசாராரும், இகழ்வது ஒருசாராருமா யிருக்கின்றார்கள். கடவுள் உலக வடிவா யிருக்கின்றாரென்று அறிஞர்கள் கூறுவதால் இகழ்வது பெருங்குற்றமேயாகும். தான கெட்டவனானால் உலகமும் கெட்டதே, தான் நல்லவனானால் உலகமும் நல்லதே. தன்னைப் பழிப்பதைவிட்டு உலகத்தைப் பழிப்பது அறியாமை.

* * * *

சமரச சன்மார்க்க சங்கம். நாவலூற்று.

இச் சங்கத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவுவிழா சென்ற ஆவணித்திங்கள் 31 நாளும் மூன்றாவதாண்டு துவக்க விழா புரட்டாசித்திங்கள் 1 நாளும் ஒட்டன் சத்திரத்தில் மிகவும் விமரிசையாக நடைபெற்றது. காரந்தை தமிழ்ச்சங்கத் தலைவர். உ. வே. உமா மகேஸ்வரம் பிள்ளை அவர்கள் B,A. B.,L. தலைமை வகிததார்கள். திருவாளர், திரு-வீ. கலியாணசுந்தர முதலியாரவர்கள், திருச்சி, தமிழ்ப் பண்டிதர் திருவாளர், வேங்கடசாமி நாட்டாரவர்கள், மணிவாசகத் தமிழகம், விசுவநாதப் பிள்ளை அவர்கள் திருக்கோவலூர், திருவாளர், மா. ரா. குமாரசாமி பிள்ளை அவர்கள் முதலிய பல அறிஞர்கள் முறையே இறைவனும் இயற்கையும், திருக்குறள் ஆராய்ச்சி, வெற்றுரை? ......போகம். ஆகிய அரும்பெரும சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்கள். சங்கத்தலைவர் ஸ்ரீமத் சிவநேச அடிகள் மிகுந்த பொறுமை காட்டி அன்போடுபசரித்துச் சங்கங் கூட்டி நடத்தியது யாவராலும் பாராட்டுதற்குரியது.

---

# பரம இச்சாஞான தீபிகை.

---

இஃது முன் "நியு ரிபார்மர்" பத்திராதிபரான

D. கோபால செட்டியாரால்

மொழிபெயர்க்கப்பட்டது.

விலை ரூபாய் ஒன்றே.

---

ஆதி முக்தனும் சிவபெருமானிட இச்சாஞான சக்திகளின் சுபாவத்தையும் விரிவான தொழிற்பாடுகளைக் குறித்தும் இந்த ஞானநூல் எழுதப்பட்டுள்ளது. இதுவரையில், கிரகிக்க முடியாதபடியினால், சிதம்பர இரகசியங்கள் போன்ற இரகசியங்களாக எண்ணப்பட்ட அநேக தத்துவசாஸ்திர உண்மைகள் இந்நூலில் யாவருமறிய விவரிக்கப்பட்டிருக்கின்றன. அஃதன்றி அநேக சைவசித்தாந்த புதிய உண்மைகள் இந்நூலில் காணலாம்.

இந்நூலை சுதேசமித்திரன், இந்து சாதனம், தமிழ்நாடு போன்ற அநேக தமிழ் பத்திரிகைகளும், Daily Express போன்ற ஆங்கிலேய பத்திரிகைகளும், சைவசித்தாந்த நிபுணர் பலரும் வியந்து பேசுகிறார்கள்.

வேண்டியவர் அடியில் கண்டவருக்கு எழுதவும்.

D. கோபால செட்டியார்,
முன் "நியு ரிபார்மர்" பத்திராதிபர்,
ராயப்பேட்டை போஸ்ட்
சென்னை.

# சந்தாதாரர்களுக்கு ஓர் அறிக்கை.

மாதந்தோறும் நாம் அனுப்பிவரும் பத்திரிகை சிலருக்கு நேராகவும், சிலருக்குக் கைமாறியும், சிலருக்கு நட்பினர் மூலமாகவும் கிடைக்கும். பத்திரிகை கிடைத்த[illegible] சந்தாதாரர்கள் தமது நேரான விலாஸத்தை எழுதியனுப்பவேண்டியது, அத்துடன் தமது நண்பர்களையுந்தூண்டி இப்பத்திரிகைக்கு சந்தாதாரர்களாகச் செய்விப்பது ஓர் பேருபகாரமாகும். பத்திரிகை வேண்டாத அன்பர்கள் நமக்கு வீண்வேலைக்கும், வீண்செலவிற்கும் இடமில்லாமல் தங்கள் அபிப்பிராயத்தை தெரிவித்துவிட்டால் அதுவே ஓர் சிறந்த கைம்மாறாகும். பத்திரிகை மாதந்தோறுங் கிடைக்காதிருந்தால் உடனே பத்திராதிபருக்கு அறிவிக்கவேண்டியது. ஓராண்டு கடந்தும் சந்தா தொகையனுப்பாமலிருப்பது வருந்தத்தக்கது. ஆகையால் தயவுசெய்து சந்தா தொகையை அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

விஷயதானம் செய்யும் அன்பர்கள் அவ்விஷயதானம் கூடிய மட்டில் ஒரேவெளியீட்டில் பிரசுரித்துவிடும்படி மிக சுருக்கமாய் விளக்கி வரைந்தனுப்புமாறு வேண்டுகின்றோம்.

பத்திராதிபர்:- வடலூர், தி. கோ. வரதராஜர்,
தில்லையாளி, P. O. மாயவரம் வழி.

வருடசந்தா:- இந்தியா, பர்மா, சிலோன்

முதலியவிடங்களுக்கு ரூ 2—0—0

வெளிநாடுகளுக்கு ரூ 2—8—0

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

முன் பணமாய் அனுப்புகிறவர்களுக்கு வி. பி. சிலவு ஏற்படமாட்டாதென்பதை கவனிக்க வேண்டும்.

Editor & Publisher:— **T. G. Varadarajar**, Thillaiyadi.
Printer:— **G. Ramachandra Naidu**, Vasantha Press, Mayavaram.